091

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

விசேட தேவைகள்சார் கல்வித்துறை

சிறப்புக் கல்விமாணி (விசேட தேவைகள்சார் கல்வி) நிகழ்ச்சித் திட்டம் - 2020/2021

SNE5247/ESE5147- உள்ளடங்கல் வகுப்பறையின் பிரச்சினைகளைக் கையாளுதல்

இறுதிப் பரீட்சை - 2021

பகுதி - I இன் அனைத்து வினாக்களுக்கும் பகுதி - II இல் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 15.08.2021 நேரம் : பி.ப 01.30 - பி.ப 04.30

## பகுதி I

01. உள்ளடங்கல் வகுப்பறை ஒன்றில் விசேட தேவைகள் உள்ள பிள்ளைகள் முகங்கொடுக்கும் ஐந்து (05) சவால்களைப் பட்டியற்படுத்துக.

02. இலங்கையில் உள்ளடங்கற் கல்விக்கு தடையாக காணப்படும் இரண்டு (02) காரணிகளை விளக்குக.

03. குறைந்தளவு நிராகரிப்பபைக் கொண்ட சூழல் (Least Restrictive Environment) என்ற பதத்தினை வரைவிலக்கணப்படுத்துக.

04. உள்ளடங்கல் வகுப்பறைக்கான வினைதிறனான வகுப்பறை முகாமைத்துவ நுட்பங்கள் நான்கினை (04)ப் பட்டியற்படுத்துக.

05. உள்ளடங்கற் கல்வியை அமுல்படுத்தும் பொழுது சமுதாயத்தில் காணப்படும் எதிர்மறையான சமூகக் காரணிகள் மூன்றினை (03) விளக்குக.

06. தனியாள் மையக் கல்வித்திட்ட (IEP) த்திற்கான குழு ஒன்றில் அங்கம் வகிக்கக்கூடிய நபர்களைக் குறிப்பிடுக.

07. இலங்கையின் கல்வி முறைமையில் விசேட கல்வித் தேவைகள் உள்ள பிள்ளைகளுக்கான இடமளித்தல் தொடர்பான தீர்மானங்கள் குறித்து காணப்படும் சவால்கள் மூன்றினை (03) சுருக்கமாக விளக்குக.

08. வினைத்திறனான உள்ளடங்கற் பாடசாலையின் உருவாக்குவதற்கு பாடசாலை அதிபர்கள் அமுல்படுத்தக்கூடிய உபாயங்கள் மூன்றினை (03) குறிப்பிடுக.

(08 x 05 = 40 புள்ளிகள்)

## பகுதி II

09.

i. ஓர் உள்ளடங்கல் அமைப்பினுள் விசேட கல்வித் தேவைகளையுடைய பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு ஆசிரியர் கொண்டிருக்க வேண்டிய முன்-தேவைத் (அடிப்படை) திறன்களைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. மாணவர்களின் பல்வகைமையான தேவைகளை கையாளுதலில் ஒரு ஆலோசகராக ஆசிரியர் ஒருவரின் வகிபங்கினை விளக்குக.

(10 புள்ளிகள்)

10.

i. விசேட கல்வித் தேவைகளையுடைய பிள்ளை ஒன்றின் பெற்றோராக உங்களைக் கற்பனை செய்து கொள்ளுங்கள்.
விசேட கல்வித் தேவைகளையுடைய பிள்ளை ஒன்றின் பெற்றோரால் எதிர்நோக்கப்படும் சவால்களை உதாரணத்துடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. விசேட கல்வித் தேவைகளையுடைய பிள்ளைகளுக்கும் அவர்களின் பெற்றோருக்கும் பெற்றோர் உதவிக் குழுவின் முக்கியத்துவத்தினை ஆராய்க.

(10 புள்ளிகள்)

11.

i. விசேட கல்வித் தேவைகளையுடைய பிள்ளைகளின் தேவைகளை விசாலப்படுத்துவதற்கு கல்வி சார் ஏற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் பாடசாலை நிருவாகங்களை எவ்வாறு வேண்டிக்கொள்ளலாம் என்பதைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. விசேட கல்வித் தேவைகளையுடைய பிள்ளைகளின் சமூக இடைத் தொடர்பில் சகபாடிகளின் முக்கியத்துவத்தினை விளக்குக.

(10 புள்ளிகள்)

12.

i. இலங்கையின் உள்ளடங்கற் கல்வி தொடர்பில் தேசிய மட்டத்தில் தற்போதைய கல்வி முறைமையில் பல சவால்கள் காணப்படுகின்றன. குறித்த சவால்களுள் ஐந்தினை (5)ச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. உள்ளடங்கற் கல்வி வசதியளிக்கும் வகையில் இலங்கையின் தற்போதைய கல்வி முறைமையை மீள் கட்டமைப்பதில் அரசாங்கத்தின் வகிபங்கினை ஆராய்க.

(10 புள்ளிகள்)

13.

i. நடத்தை சார் பிரச்சினைகளையுடைய பிள்ளைகளின் பண்பியல்புகளை உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. நீங்கள் நடத்தை சார் பிரச்சினைகளையுடைய மாணவன் ஒருவனைக் கொண்டுள்ள உள்ளடங்கல் வகுப்பறையின் ஆசிரியர் எனக் கொள்வோம்.

ஓர் ஆசிரியராக நீங்கள் அனுபவிக்கக்கூடிய பிரச்சினைகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

14.

i. 'தரமான உள்ளடங்கள் கல்வி சிறப்பானதொரு உள்ளடங்கற் சமூகத்தை உருவாக்குகின்றது'
இக்கூற்றினை நியாயப்படுத்துக.

(10 புள்ளிகள்)

ii. பாடசாலையில் கற்பிப்பதற்கு விசேட கல்விக்கான உதவிகளைப் பெறுவதன் முக்கியத்துவத்தினை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*